## தலைப்பு 208 – தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு

தலைப்பு - 208 தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 26 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 309.30 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 268.24 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 41.06 மில்லியன் அதாவது 13.28 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 161.44 | 149.85 | 11.59 | 7.18 |
| மூலதனம் | 147.86 | 118.39 | 29.47 | 19.93 |
| மொத்தம் | 309.30 | 268.24 | 41.06 | 13.28 |

## 2.2 முற்பணக் கணக்கு

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 20801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 13.39 | 7.75 | 5.89 | 7.81 | 45.00 | 27.07 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 5.12 மில்லியன் ஆக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய ரூபா 385,229 கூட்டுத்தொகையான 2 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

20801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 664,309 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.3.1 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகினாலும் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கொழும்பு மற்றும் 8 பிராந்திய அருங்காட்சியகங்களில் காணப்பட்ட அருங்காட்சியகப் பொருட்கள் அந்த பொருள் மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களத்தால் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) தேசிய அருங்காட்சியக அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்தல்

1942 இன் 31 ஆம் இலக்க தேசிய அருங்காட்சியக கட்டளைச் சட்டத்தை நீக்கி இலங்கையின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு பொருத்தமான வகையில் புதிய அதிகாரச்சட்டத்தை உருவாக்கும் நோக்கத்தில் 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி அமைச்சரவைக்கு குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையினால் அது கலந்துரையாடப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட நியதிகளின் படி சட்ட வரைவொன்றைப் பெற்று திருத்தங்களை மேற்கொண்டு 2015 யூலை 07 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2016 மே மாதம் வரையில் புதிய அதிகாரச்சட்டத்தைத் திருத்தும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) நுண்பாக முறையில் படமெடுத்தல்

கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தின் நூலகத்தின் கீழ் காணப்பட்ட நுண்பாக முறையில் படமெடுக்கும் பிரிவு 2012 திசெம்பர் மாதம் முதல் படவடிவமைப்புப் பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டிருந்தது. நுண்பாக முறையில் படமெடுத்தல் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நூலகத்திற்குச் சொந்தமான மிகவும் பழைய புத்தகங்கள் மற்றும் பூஞ்சனம் பிடித்த புத்தகங்களில் உள்ளடங்கியுள்ள தகவல்களை ஏனைய ஊடகத்தில் பாதுகாப்பாக வைப்பதற்காக முறையான மாற்றுவழி நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அருங்காட்சியகப் பொருட்களை பதிவேடுகளுக்குக் கொண்டுவருதலும் படமெடுத்தலும்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கண்டி தேசிய அருங்காட்சியகத்திற்குச் சொந்தமாகவுள்ள 43 வகையான அருங்காட்சியகங்களுக்குரிய 6063 பொருள் விடயங்கள் முறையான பிரகாரம் பதிவேடுகளுக்குக் கொண்டுவருதல் மற்றும் படமெடுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்திற்குச் சொந்தமான அனுராதபுரம், இரத்தினபுரி மற்றும் ஓலந்த சுதந்திர ஞாபகார்த்த அருங்காட்சியகங்களுக்குரிய 248 வகையான அருங்காட்சியகப் பொருட்களில் 4329 விடயங்கள் முறையான வகையில் படமெடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரத்தினபுரி அருங்காட்சியகத்தைத் திருத்துதல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கலாசார நிலையமொன்றின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்திசெய்தல்

இந்த கட்டிடத்தின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்காக சப்ரகமுவ மாகாண சபையின் பொறியியலாளர் சேவை அலுவலகத்தினால் ரூபா 3,613,000 கிரய மதிப்பீடொன்று 2013 மார்ச் மாதத்தின் போது அருங்காட்சியாக திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 3,613,000 தொகை சப்ரகமுவ மாகாண பிரதேச பொறியியல் சேவை அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. பணம் செலுத்தி இரண்டு வருடங்களைக் கடந்திருந்த போதிலும் 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மலசலகூட முறைமையினைத் திருத்துதல்

இரத்தினபுரி அருங்காட்சியகத்தை திருத்துவதன் கீழ் அதன் மலசலகூட முறைமையைத் திருத்தும் நடவடிக்கைகள் சப்ரகமுவ மாகாண சபையின் பிரதேச பொறியியலாளர் சேவை அலுவலகத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்தது. 2014 நவம்பர் 19 ஆந் திகதி பிரதேச பொறியியலாளர் சேவை அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதற்காக அருங்காட்சியகங்கள் திணைக்களத்தால் சப்ரகமுவ மாகாண பிரதேச பொறியியலாளர் சேவை அலுவலகத்திற்கு ரூபா 1,858,000 தொகை மூன்று சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் மாதம் வரையில் இந்த திருத்தங்களுக்குரிய எந்தச் செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) அருங்காட்சியக கட்டிடத்தைத் திருத்துதல்

அருங்காட்சியக கட்டிடத்தின் திருத்த நடவடிக்கைகள் சப்ரகமுவ மாகாண சபையின் பொறியலாளர் சேவை அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 5,771,000 தொகையான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு 2015 ஒக்தோபர் 26 ஆந் திகதி அருங்காட்சியகங்கள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது பிரதேச

பொறியியலாளர் அலுவலகத்திற்கு ரூபா 5,771,000 மொத்தப் பணமும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் மாதம் வரையும் திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கண்டி அருங்காட்சியகத்தின் திருத்த நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரும்பு வேலி நிர்மாணம்

கண்டி அருங்காட்சியகத்தில் இரும்பு வேலி நிர்மாணிக்கும் செயற்பாடுகள் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ரூபா 4,759,000 மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் அந்த நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அருங்காட்சியகக் கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களைத் திருத்துதல்

கண்டி அருங்காட்சியகத்தின் கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றைத் திருத்தவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 16,990,000 மற்றும் ரூபா 3,400,000 தொகைகள் கட்டிடங்கள் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த திருத்த நடவடிக்கைகளினால் 2014 செப்தெம்பர் 10 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் அருங்காட்சியகத்தை மூடிவிடுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

❖ திருத்த நடவடிக்கைகள் 2016 ஏப்ரல் மாதம் வரையில் பூர்த்தி செய்யப்படாமையினால் 18 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் அருங்காட்சியகம் மூடப்பட்டிருந்தமையால் பொது மக்களுக்கு அதைப் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 4,914,525 வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்த இந்த அருங்காட்சியகத்திலிருந்து 2015 ஆம் ஆண்டின் போது எவ்வித வருமானமும் சேகரிக்கப்பட்டிருக்க வில்லை.

❖ இந்த அருங்காட்சியகத்தின் நடுப்பகுதியில் கல் பதிப்பதற்காக 2015 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 4,914,525 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் அந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமையினால் அருங்காட்சியகத்தை திறந்து வைத்தல் மேலும் தாமதமாகியிருந்தது.

(ஊ) பார்வையாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமை

கொழும்பு தேசிய அருங்காட்சியகக் கட்டிடத்தின் திருத்த நடவடிக்கைகளின் காரணமாக 2014 ஆகஸ்ட் மாதம் முதல் 15 மேடைகளில் 8 மேடைகள் மூடப்பட்டிருந்தன. கொழும்பு தேசிய அருங்காட்சியகம் மற்றும் இயற்கை விஞ்ஞான அருங்காட்சியகம் என்பவைகளுக்காக ஒன்றிணைந்த நுழைவுச்சீட்டுக்கள் 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் வழங்கப்பட்டமையால் 2014 ஆம் ஆண்டில் ரூபா 12,357,360 தொகையான வருமானம் 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 24,854,080 வரை 100 சதவீதத்தால் உயர்வடைந்திருந்த போதிலும் பார்வையாளர்களின் எண்ணிக்கை 249,950 முதல் 203,403 வரை 46,547 இனால் குறைவடைந்திருந்தது.

**3.6 நட்டமும் இழப்பும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அருங்காட்சியாக அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ விடுதி (இரத்தினபுரி) திருத்தம் செய்தல்

இரத்தினபுரி அருங்காட்சியாக வளவில் அமைந்துள்ள அருங்காட்சியக அத்தியட்சகர் உத்தியோகபூர்வ விடுதியைத் திருத்தும் தேவைகள் இனங்காணப்பட்டு சப்ரகமுவ மாகாண பொறியியலாளர் சேவை அலுவலகத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,079,000 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 3 வருடங்கள் கடந்திருந்த போதிலும் திருத்தப்பட்டிராத இக்கட்டிடம் 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் துருப்பிடித்துக் காணப்பட்டது.

(ஆ) அருங்காட்சியகத்தில் ஏற்பட்ட களவிற்குரிய நீதிமன்ற நடவடிக்கைகள்

2012 மார்ச் 16 ஆந் திகதி கொழும்பு தேசிய அருங்காட்சிகயத்தில் ஏற்பட்ட களவினால் காணாமல்போயிருந்த அருங்காட்சியகப் பொருட்களின் அளவு 221 ஆக இருந்ததுடன் அப்பொருட்களின் பெறுமதி ரூபா 4,440,140 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதில் 94 பொருட்கள் ஆரம்ப நிலையிலும் 57 பொருட்கள் பாகங்களாகவும் கற்களாகவும் மீளக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. ஏனைய பொருட்கள் வெட்டி, உடைக்கப்பட்டமையால் அழிவடைந்திருந்தது. 2016 யூன் மாதம் வரையிலும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

**3.7 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 06 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 123 | 70 | 53 |
| (iv) | ஆரம்ப நிலை | 258 | 189 | 69 |
| | மொத்தம் | 400 | 266 | 134 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அருங்காட்சியகங்கள் உதவியாளர் பதவி வெற்றிடங்கள்

---

2015 செப்தெம்பர் மாதம் வரையில் அருங்காட்சியக உதவியாளர் பதவியில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டிருந்ததுடன் திறமைகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு நியமனக் கடிதங்கள் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக அருங்காட்சியகங்கள் பணிப்பாளரினால் 2015 ஒக்தோபர் மாதத்தின் போது அமைச்சின் செயலாளரிடமிருந்து அதற்காக பங்குபற்றக்கூடிய திகதியொன்று கடிதம் மூலம் கோரப்பட்டிருந்த போதிலும் எவ்வித நியாயமான அடிப்படையுமின்றி மேற்கூறப்பட்ட நேர்முகப்பரீட்சை இரத்துச் செய்யப்பட்டதாக 2016 யூன் மாதத்தின் போது அமைச்சுச் செயலாளரினால் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த அளவை விடக் குறைவாக அருங்காட்சியக உதவியாளர்களில் ஒரு சிலரைப் பயன்படுத்தி மேடையைத் திறத்தல், அருங்காட்சியக பொருட்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) படமெடுத்தல் பதவியணியினரின் வெற்றிடங்கள்

---

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு அங்கீகரிக்கப்பட்ட 01 படப்பிடிப்பாளர் வடிவமைப்பாளர் பதவி மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. படப்பிடிப்பு பிரிவிற்கு நியமிக்கப்பட்ட நுண்பாக படப்பிடிப்பு பிரிவில் காணப்படுகின்ற இயந்திர உபகரணங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் பரீட்சிப்பிற்காக தொழில்நுட்பக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரிவின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான குழுவின் முன்மொழிவின் பிரகாரம் உதவி படப்பிடிப்பாளர்களில் (Assistant Reprographers) 3 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெற்றிடம் காணப்படுகின்றமை அருங்காட்சியகப் பொருட்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்தமை

---

கொழும்பு அருங்காட்சியகத்தில் 2012 மார்ச் 16 ஆந் திகதி ஏற்பட்ட அருங்காட்சியக பொருட்களின் களவு மற்றும் 2014 நவம்பர் 16 ஆந் திகதி இரவில் ஏற்பட்ட அனுமதியற்ற உள்நுழைவு போன்ற சம்பவங்களின் அடிப்படையில் அருங்காட்சியகத்தின் பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினைகள் காணப்பட்ட போதிலும் 2013 மே 23 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியும் 10 அருங்காட்சியக பாதுகாப்பு (Curator) பதவிகளில் 06 பதவியும் 05 பாதுகாப்பு உதவியாளர் பதவிகளும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன.